2012 மே 14]

கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கவலை கொண்டுள்ளார்கள். *(சிரிப்பு)*

முற்பகல் 10–45

வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

257—

ஆராய்ச்சி மையம்

*1251—**திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் கோழிப் பண்ணை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லடம் தொகுதியில் கோழிப்பண்ணை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். மானியக் கோரிக்கையிலே நான் அறிவிப்புகளை வாசிக்கும்போது, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கோவை, திருப்பூர் மற்றும் பல்லடம் பகுதிகளிலுள்ள கோழிப் பண்ணைகளை மையப்படுத்தி, மேலும் ஒரு கோழி ஆராய்ச்சி நிலையத்தைப் பல்லடம் பகுதியில் 2 கோடியே, 63 இலட்சம் ரூபாய் செலவில், நடப்பாண்டில் தோற்றுவிக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று மூன்றாவது அறிவிப்பாக நான் தெரிவித்திருக்கிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, பல்லடம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். பல்லடம் பகுதியில் அதிகப்படியாக இயங்கிக்கொண்டிருக்கின்ற விசைத்தறித் தொழிலுக்கும், மிகப் பெரிய சலுகையாக 1994 ஆம் ஆண்டு 9.2 கோடி ரூபாயும், 2002 ஆம் ஆண்டு 11.2 கோடி ரூபாயும், 2005 ஆம் ஆண்டு 30.3 கோடி ரூபாயும், 2012 ஆம் ஆண்டு 59.69 கோடி ரூபாயும் மானியமாக வழங்கி, கொங்கு மண்டலமே வியக்கத்தக்க வகையில், சிந்திக்க வைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை மனதாரப் பாராட்டி, வாழ்த்தி, வணங்கி அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

258—

பயணியர் விடுதி

*3513—**திரு. ஏ.கே.டி. ராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றத்தில் பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றம் ஒன்றாம் படை வீடாகும். இத்திருத்தலத்திற்கு, உள்ளூர் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தருகின்றனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.